


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 80 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 12 – ஞாயிற்றுக்கிழமை 29 அக்டோபர் 2023 – வெளியீூ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 80 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 12 - Sunday 29 October 2023 - Dak 16 Pages ₹ 5.00


## கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்!

# மாலத்தீவிலிருந்து மீனவர்களை உடனே மீட்டெடுத்திடுக!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தன்னை சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1500 புத்தகங்களை தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நன்கொடையாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் ஆர்.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக். 29 - மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள் மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் 23.10.2023 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விரைவில் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீன் இறங்குதளத்திலிருந்து, 1.10.2023 அன்று, INDTN12 MM6376 பதிவு எண் கொண்ட விசைப்படகில் மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள், 23.10.2023 அன்று தினாது தீவு அருகே மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம், மாலத்தீவு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்டுள்ள 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

## மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.வுக்கு கடும் எதிர்ப்பு!

# பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் திடீர் ரத்து!

*ஐஸ்வால், அக். 29 - மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.,வுக்கு பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு நிலவுவதால் பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*மக்கள் விரோத செயல்பாடுகள் காரணமாக ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு நிலவி வருகிறது. இது, ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும் என அரசியல் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. கருத்துக்கணிப்பு முடிவுகளும் பா.ஜ.க.,வுக்கு எதிராகவே அமைந்துள்ளன.*

*இந்நிலையில், மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க., மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மிசோரமில் மிசோ தேசிய முன்னணி கட்சி பா.ஜ.க.,வுன் இணைந்து கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. கூட்டணி ஆட்சியில் மாநிலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் இரு கட்சிகள் மீதும் கடும் அதிருப்தி நிலவுகிறது. கூட்டணியிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. பா.ஜ.க.,வின் பிரச்சாரத்தில் கலந்து கொள்ள போவதில்லை என கூட்டணி கட்சிகள் அறிவித்துள்ளன.*

*இதன் காரணமாக தனது மிசோரம் தேர்தல் பிரச்சாரத்தை பிரதமர் மோடி ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மிசோரம் மாநிலத்தில் அடுத்த மாதம் 7 ஆம் தேதி சட்டபேரவை தேர்தல் நடைபெறுகிறது. அங்கு வரும் 30 ஆம் தேதி பிரதமர் பிரச்சாரத்துக்கு செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

## ‘வந்தே பாரத்’ ரயில்களை தயாரிக்க பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒப்பந்தம்!

# ரூ.10 ஆயிரம் கோடி மெகா முறைகேடு!

## ஐ.சி.எப். ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, அக்.29 – வந்தே பாரத் ரயில்களை தயாரிக்க பன்னாட்டு தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதிய படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயிலை உருவாக்க பன்னாட்டு நிறுவனத்துடன் ரயில்வே அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு ஐ.சி.எஃப் ஊழியர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது வரை வந்தே பாரத் ரயிலை தாங்கள் தயாரித்த நிலையில், தற்போது தனியாருக்கு ஒப்பந்தம் அளித்துள்ளதாகவும், ரயில் பெட்டி தயாரிப்புக்கு ஐ.சி. எஃப்., நிறுவனம் முழுவதையும் அவர்கள் பயன்படுத்தி கொள்ளவுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

ரயில் தயாரிப்புக்கு தேவையான பொருட்கள், இடம் உள்ளிட்ட அனைத்தையும் நம்மிடமே பெற்று கொண்டு, எந்த முதலீடும் இல்லாமல் லாபம் சம்பாதிக்க உள்ளதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசை கண்டித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.சி.எஃப்., ஊழியர்களால் 70 கோடி ரூபாயில் வந்தே பாரத் ரயில் தயாரிக்கப்படும் நிலையில், பன்னாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஒரு ரயிலுக்கு 120 கோடி ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், 200 ரயில்களை தயாரிக்க ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் மற்றும் முறைகேடு அரங்கேறியுள்ளதாகவும் குற்றம் சாட்டு எழுந்துள்ளது.

பன்னாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்ய வேண்டும் என்றும், ஐ.சி.எஃப்., ஊழியர்களால் மட்டுமே வந்தே பாரத் ரயிலை தயாரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

## தமிழ்நாட்டிலுள்ள

# சிறை நூலகங்களுக்குப் புத்தகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்கொடையாக வழங்கினார்!

**சென்னை, அக். 29 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1500 புத்தகங்களை நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில் சிறைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 2018ஆம் ஆண்டு பொறுப்பேற்றது முதல், தன்னை சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, பொன்னாடைகளை தவிர்த்து, அறிவியக்கம் உருவாக்க புத்தகங்களை வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். அதனையொட்டி, இது வரை தனக்கு அளிக்கப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் புத்தகங்களை தமிழ்நாடு மற்றும் அயலகத்தில் வாழும் தமிழர்களின் வேண்டுகோளை ஏற்று, அவர்களின் நூலகங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைவாசிகளிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும், அவர்களின் மன அழுத்தத்தை போக்குவதற்காகவும், அவர்களின் மனதில் நற்சிந்தனைகளை விதைக்கும் விதமாக, மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சிறையில் உள்ள பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் சிறை நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகங்களில், பல வகையான புத்தகங்கள், பல்வேறு வகையான செய்தித்தாள்கள், வார/மாத இதழ்கள் வைக்கப்பட்டுள்ளன.

### லட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள்

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் முதன்முறையாக சிறைத்துறை பங்கேற்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக பெற்றுள்ளது. மேலும், அனைத்து சிறைகளிலும் உள்ள சிறை நூலகங்களை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு 2023-2024ஆம் ஆண்டில் 2 கோடியே 8 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

### 1500 புத்தகங்கள் வழங்கினார்!

மேற்படி சிறை நூலகங்களில், புத்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் விதமாகவும், சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு இப்புத்தகங்கள் பேருதவியாக அமையும் என்பதை கருத்தில் கொண்டும், முதலமைச்சர் அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட 1500 புத்தகங்களை சிறை நூலகங்களுக்கு நேற்று நன்கொடையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் ஆர்.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

